# பிரும்மணி தேவி, குஜராத்

## -சாந்திப்பிரியா-



குஜராத் மானிலத்தில் காந்தி நகர் என்ற மாவட்டத்தில் உள்ளது கலோல் என்ற தாலுக்கா. அதில் உள்ள தின்குஜா என்ற கிராமத்தில் உள்ளதே பிரும்மணி தேவியின் ஆலயம். இவளை துர்கையின் அவதாரமாக கருதுகின்றார்கள். இங்குள்ள தின்குஜாயிட் என்ற பிரிவை சார்ந்த வணிகர்கள் பெருமளவில் வெளி நாடுகளில் சென்று தங்கி உள்ளனர். ஆனாலும் அவர்கள் சொந்த மண்ணில் உள்ள புராதானப் பெருமை வாய்ந்த ஆலயத்தை மறந்து விடாமல் அதைப் புதுப்பித்து வழிபடுகின்றனர்.

பிரும்மணி மாதா பற்றிய கதை இது . பல காலத்திற்கு முன் தின்குஜா எனப்படும் இடத்தில் இருந்த மக்கள் தத் தம் வீடுகளைக் கட்ட பயன்படும் பொருட்களைக் கொண்டு வர பக்கத்து ஊருக்கு சென்று வர வேண்டி இருந்தது. அந்த காலத்தில் வாகன வசதிகள் அதிகம் கிடையாது என்பதினால் மாடுகள் மற்றும் குதிரைகள் பூட்டப்பட்ட வண்டிகளில்தான் பயணத்தை மேற் கொள்ள முடிந்தது. பாதையோ சரியாக இல்லை. கற்களும், பள்ளங்களும் நிறைந்தே இருக்கும். பயணம் செய்வதும் மிகக் கடினம்.

அப்படிப்பட்ட நேரத்தில் ஒரு நாள் சில கிராமத்தினர் எப்பொழுதும் போல் பக்கத்து ஊருக்குச் சென்று விட்டு திரும்பி வந்து கொண்டு இருந்தனர். அது மாலை மங்கிய நேரம் என்பதினால் வழி தவறி விட்டது. ஊரை விட்டு விலகி அடர்ந்த காட்டுப் பகுதியின் மையத்தில் சென்று விட்டனர். அந்த பகுதி சமதள இல்லாமலும் கரடு முரடாகவும் இருந்ததினால் காளை வண்டிகளால் வண்டியை இழுத்துக் கொண்டு செல்ல முடியவில்லை. எல்லோரும் மன அழுத்தமும் கவலையும் அடைந்தனர். என்ன செய்வது எனக் குழம்பியபடி பயந்து கொண்டு இருந்தனர். எவராவது உதவிக்கு வரமாட்டார்களா எனக் கூவி அழைத்துப் பார்த்தனர். எவரையும் காணவில்லை. சற்று நேரம் பொறுத்து தூரத்தில் இரண்டு இரண்டு பழுப்பு நிற கண்கள் கொண்ட சகோதரிகள் நடந்து வந்து கொண்டிருந்தது தெரிந்தது. அவர்களிடம் ஓடிச் சென்று தாம் போக வேண்டிய இடத்தைக் கூறி அதன் வழியைக் கூறுமாறு கேட்டனர். அவர்களுக்கு வழியைக் கூறினாலும் பாதையை கண்டு பிடித்துக் கொண்டு போவது கடினம் என்றும், ஆகவே தம்மையும் வண்டியில் ஏற்றிக் கொண்டால் அவர்கள் செல்ல வேண்டிய இடத்திற்கு வழி காட்டுவதாகக் கூறினர். ஏற்கனவே மாடுகளினால் வண்டியை இழுக்க முடியவில்லை. படுத்துக் கொண்டு விட்டன. மேலும் இருவரை ஏற்றிக் கொண்டால் அது என்ன செய்யும்

என பயந்தபடி அவர்களிடம் கூற அந்த பெண்கள் ஒன்றும் கூறாமல் மாடுகளின் அருகில் சென்று அவற்றைத் தடவிக் கொடுக்க சோர்ந்து போய் படுத்திருந்த மாடுகள் துடிப்பாக எழுந்து நின்றன. அனைவரும் ஆச்சரியமாக அதைப் பார்த்தபடி இருந்த பொழுது அந்தப் பெண்கள் வண்டியில் ஏறிக் கொள்ள மாடுகள் சற்றும் சிரமம் இன்றி வண்டியை இழுத்துக் கொண்டு ஓடின. களைப்பினால் அவதியுற்றவர்கள் வண்டியிலேயே உறங்கி விட்டனர். போகும் வழியில் வந்த தின்குசா கிராமத்தில் ஒரு ஏரியின் அருகில் ஒருவள் இறங்கிக் கொள்ள மற்றவள் அந்த கிராமத்தின் வடக்குப்புறம் இறங்கிக் கொண்டாள். அவர்களை எவரும் கவனிக்கவில்லை. காலை அவர்களுடைய கிராமத்திற்கு வண்டி சென்று நிற்க, முழித்தெழுந்தவர்கள் வண்டியில் ஏறிக் கொண்ட பெண்களைத் தேடினர். அவர்களை வண்டியில் காணவில்லை. அன்று இரவு அவர்களுடைய கனவில் ஒரு பெண் தோன்றினாள். தான்தான் பிரும்மணி மாதா எனவும் தான் இறங்கிக் கொண்ட தின்குச்சாவில் ஒரு ஆலயம் எழுப்பி தன்னை வழிபடுமாறும் கூறினாள். அதற்கேற்ப கிராமவாசிகள் கிராமத்தின் கிழக்கு நுழைவாயிலில் ஒரு சிறிய ஆலயம் எழுப்பி மாதா பிராமணியை வணங்கத் தொடங்கினர்.

அதன் பின் சில வருடங்களுக்குப் பிறகு வியாபார விஷயமாக சில வணிகர்கள் ரங்கோன் நகரத்திற்குச் சென்றனர். துரதிஷ்டவசமாக அந்த ஊரில் இருந்தவர்களால் ஏமாற்றப்பட்டு அனைத்தையும் இழந்துவிட்டு நடைப் பயணமாகவே அஸ்ஸாம் வழியாக தாயகம் திரும்பி வரலாயினர். அடர்ந்த காட்டில் நடந்து வந்தவர்கள் களைப்புற்று வழியையும் தவற விட்டனர். துயரமுற்றவர்கள். ‘அம்மா பிராம்மணி மாதா நீதான் எங்களைக் காத்தருள வேண்டும்’ எனக் கதறி அழுதனர். என்ன வினோதம் திடீர் என ஒரு சிறிய பெண் அங்கு வந்தாள். ‘கவலைப் படாதீர்கள், நான் உங்களுக்கு வழி காட்டி

அழைத்துச் செல்கின்றேன்' எனக் கூறி அவர்களை தன் பின்னால் நடந்து வரச் சொன்னாள். ஆச்சரியமாக அவர்களுடைய களைப்பும் மறைந்தது. அவளுடன் சேர்ந்து நடக்கத் துவங்கியவர்கள் விரைவாக ஊர் திரும்பினார்கள். எப்படி அத்தனை சுலபமாக எந்த விதமான சிரமமும் இன்றி தாம் வந்து சேர்ந்தோம் என ஆச்சரியப்பட்டு அந்தப் பெண்ணைத் தேடிய பொழுது அவளைக் காணவில்லை. அந்த சம்பவம் பிராம்மணி மாதாவின் மேல் அவர்களுக்கு இருந்த நம்பிக்கையை மேலும் அதிகமாக்கியது. ஆகவே அங்கிருந்த பிராம்மணி மாதா ஆலயத்தை இன்னமும் புதுப்பித்து பெரியதாக கட்டி வழிபடலாயினர்.

பிரும்மணி மாதாவிற்கு இராஜஸ்தானிலும் சில இடங்களில் ஆலயம் உள்ளது. கோடா நகருக்கு அருகில் உள்ள அந்த ஒரு ஆலயத்தில் நானூர்று ஆண்டுகளுக்கும் மேலாக அகண்ட ஜோதி எரிந்து கொண்டு உள்ளதாம். பிராம்மணி மாதாவை மனதார வேண்டிக் கொண்டால் நினைத்தது நடக்குமாம். தீபாவளி போன்ற பண்டிகை நாட்களில் கூட்டம் நிறம்பி வழிகின்றது. குஜராத்தில் உள்ள மாதாவின் ஆலயமே முக்கியமான பிராம்மணி ஆலயம் என நம்பப்படுகின்றது.

# Goddess Brahmani Devi, Gujarat

## Santhipriya



Kalol is a small taluk in Gandhi Nagar district in the state of Gujarat, India. The temple of Goddess Brahmani is located in the village of Tinkuja which is in Kalol. She is considered to be the incarnation of Goddess Durga. The Brahmani Mata also known as Brahmi is kind and benevolent aspect of Devi, the Divine mother. She is one of the seven Mother Goddesses called Saptha Matrikas. She is

depicted yellow in color and has four heads. Like Brahma, she holds a rosary or noose and Kamandal or lotus stalk or a book or bell and she is seated on a Swan as her carrier vehicle. Most of the traders in Tinkuja belong to the Tinkujayit community but settled abroad. Still they continue to offer worship in their home town Tinkuja without ignoring it.

There is a folklore on this temple. Long ago, people in Thinkuja village had to travel to the neighboring town to bring everything they need even for running home. Due to the lack of transport facilities, they had to travel either by bullock or horse driven carts to fetch the material. The roads used to be full of ditches strewn with small marble stones or pebbles thus making the travel very difficult.

One day few villagers went to the next town as usual and were returning back. Since it was dusk and dark, they lost their way and entered into the dense forest. The travel path was very rough and bumpy, hence the bullocks found it difficult to pull the cart and move. Everyone were depressed and anxious not knowing what to do. They attempted to call some one for help by raising their voices, but none would come to help. Little while later, they saw two purple eyed little girls coming from a distance. They ran to them and sought their help to guide them go out of the forest. The little girls told them that even if they tell them the route to be followed, they would not be able to track it and hence, if they agree to take them in the cart, they would guide them till they reached their destination. The travelers were reluctant to accommodate them in the cart as the bullocks were unable to even pull the existing travellers. The girls consoled them, went near the bullocks, and rubbed them gently on their back and the animals quickly got up as if they had gained strength. The girls asked everyone to get up into the cart along with them, and began to drive the

bullocks as if nothing had happened. Everyone were shocked to see what was happening and the traders slept on way out of tiredness. On the way to Dingucha, one of the girls got off the cart near a pond without telling anyone and sat under a tree in Khirni. The other girl too got down near a throny bush at the eastern entrance of Dingucha without telling anyone. Upon reaching the village safely, the travelers realized that the two girls were no longer with him. Shocked, they started searching for them and all their attempts to trace the girls ended in failure. On the same night a woman appeared in one of the trader's dream and introduced her as Goddess Brahmani Matha and if they raise a temple for her and worship her they would be benefited. As the trader shared his dream to others, the villagers too agreed to erect a small temple at the eastern entrance of the village and began to worship Goddess Brahmani Devi there.

A few years later another group of traders went to Rangoon in connection with their business. Unfortunately, they were deceived by the locals there, lost everything and returned back to India via Assam on foot. While walking through the dense forest they also lost their way and strayed in the forest unaware of the route to go back. They prayed to Brahmani Devi to show mercy and guide them go to their home. Suddenly a small girl appeared before them in the forest and not only consoled them but further volunteering to guide they reach their home in India. Their tiredness vanished, gained strength to walk and they followed her to easily reach their home. On reaching home, they searched for the girl who guided them to return, but she was missing. This enhanced their belief on Brahmani Devi further and so renovated the old temple to make it bigger and continued to worship the Goddess there.

Temples dedicated to Goddess Brahmani are found in some places in Rajasthan. It is stated that the oil lamp has been continuously burning for the last several years without getting extinguished in that temple. The Goddess grant boons if she was worshiped in faith. The Brahmani Mata Temple in Gujarat is believed to be the main temple of Goddess Brahmani.

## The address of the temple:

Brahmani Mataji Mandir,

Village: Dingucha

Taluka: Kalol,

District: Gandhinagar

Pin – 382740.

Tele No: – +91-2764-288081